1983 ஜனவரி 31]

பட்டவர்கள் மனுச் செய்தும் இன்னும் பலருக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கப்படவில்லை. வெளியிலேயிருந்து அவர்கள் ஆட்களை எடுக்கிறார்கள். எனவே, தனியார் துறைகளுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யும்போதும் அதனால் பாதிக்கப்படுகின்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற கண்டிஷனைப் போட்டு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியார் துறைகளுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யும்பொழுது அதனால் பாதிக்கப்படுவோருக்குவேலைவாய்ப்பு அளிப்பது சம்பந்தமாக அரசு பரிசீலித்து வருகிறது. பொதுத் துறை நிறுவனங்களுக்கான தொழிற்சாலைகளுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யும்பொழுது நிலம் கொடுத்தவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. ஆனால் அதை நடைமுறைப்படுத்துவதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. உதாரணமாக ஒரு குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பு என்ற முறையில் நிலம் கொடுத்த அனைவருக்கும் கொடுப்பது என்று சொல்லும்பொழுது அந்தக் குடும்பத்தில் 45 அல்லது 50 வயதில் ஒருவர் இருக்கலாம். ஆனால் அந்தத் தொழிற்சாலைக்குத் தேவைப்படுகின்றவர்களோ 10 ஐ.டி.ஐ. படித்தவர்களாக இருக்கலாம். நிலம் கொடுத்தவரோ 5 ஆவது வரை படித்த 50 வயதானவராக இருந்தால் அவரை வேலைக்கு எடுத்துக்கொள்ள முடியாது. டெக்னோகிராட்ஸ் தேவைப்படாமல், ஐ. டி. ஐ. போன்ற படிப்பு அறிவு தேவைப்படாத, உழைப்பு மட்டுமே தேவைப்படும் வேலையாக இருந்தால் இவர்கள் தேர்வு செய்யப் படுவார்கள். டெக்னிக்கல் போஸ்டாக இருந்தால், அந்தக் குடும்பத்திலே யாராவது அந்தப் படிப்பு படித்தவராக இருந்தால் அவர் அப்சார்ப் செய்யப்படுவார். ஆகவே, தேவைக்கேற்ப, தொழிற்சாலையின் அளவிற்கேற்ப அக்காமடேட் செய்யப்படு கிறார்கள்; இடம் தரப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 80 மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக் கிணங்க ஒத்தி வைக்கப் பெறுகிறது.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

(முற்பகல் 10–20)

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு அளித்தல்.

திரு. என். சங்கரய்யா: பாயிண்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, திரு.கு. ரமணி, எம்.எல்.ஏ. அவர்களுக்கு 6-1-1983 அன்று அவர் சட்டமன்ற உறுப்பினர் பணியை ஆற்றக்கூடிய காலத்தில், அவருக்குக் கொலை மிரட்டல் டெலிபோன் மூலம்

வந்து, அது குறித்து 28-1-1983 அன்று தங்களிடத்திலே ஒரு விரிவான கடிதம் கொடுத்து இருக்கிறார். ஒரு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குக் கொலை மிரட்டல் வருமானால் அவருக்குத் தக்க பாதுகாப்புக் கொடுக்க வேண்டியது தங்களுடைய பொறுப்பிலே அடங்கும். அந்தக் கடிதத்தின்மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லா இடங்களிலும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பது பேரவைத் தலைவரின் கீழ் வராது. அவருடைய கடிதத்தை முதல்வர் அவர்களுக்கும் முன்னவர் அவர்களுக்கும் அனுப்பி இருக்கிறேன். அதன்மீது மாண்புமிகு முதலமைச்சர் நடவடிக்கை எடுப்பார் என்று நம்புகிறேன்.

(ஆ) முன் அனுமதியின்றி எழுப்பப் பெறும் பிரச்னைகள்.

திரு. பொ. உத்திராபதி: தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். தஞ்சை மாவட்டத்தில் நெல் கொள்முதல் செய்வது குறித்த........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள். எதற்கும் ஒரு வரைமுறை இருக்கின்றது. இந்தப் பிரச்சினை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாகவோ அல்லது கவன ஈர்ப்புத் தீர்மானமாகவோ கொண்டு வாருங்கள். அதைவிட்டு பொத்தாம்போக்கிலே எழுந்து சொல்வதை அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடு) அப்படியானால் அதை என் அறையிலே வந்து கேளுங்கள். அவையிலே அனுமதிப்பதற்கு இல்லை. உங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. சிவசாமி பேசப் போகிறார். அவரிடம் சொல்லிப் பேசச் சொல்லுங்கள்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற கிருஷ்ணம்: தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். உறுப்பினருடைய உரிமையைப் பாதிக்கின்ற ஒரு விஷயம்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியானால் அதை உரிமை மீறல் பிரச்சினையாகக் கொண்டு வாருங்கள்.

3. கவன ஈர்ப்பு.

அம்மாண்டிவிளையிலுள்ள கயிறு ஆலை மூடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ஜே. ஹேமச்சந்திரன், டி. மணி, எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.